பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை 28.11.2021 கதிர் 251

## காஸ் சிலிண்டர் சுன்னாகத்தில் வெடிப்பு

காஸ் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் ஒன்று சுன்னாகம் கந்தரோடைப் பகுதியிலும் இன்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கந்தரோடை கர்ப்பப்புனை பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டிலேயே காஸ் சிலிண்டர் வெடித்ததாகக் ☞2

## செய்தியாளர் மீதான தாக்குதல்; தமிழ்த் தேசியக் கட்சி கண்டனம்



முள்ளிவாய்க்காலில் மாவீரர் நாளன்று செய்தியாளர் ஒருவர் இராணுவத்தினர் சிலரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சம்பவம் மனித உரிமைகளை குறிப்பாக ஊடகவியலாளர்களின் உரிமைகளை ☞2

## விஸ்வச்சந்திரனைத் தாக்கிய மூன்று இராணுவத்தினர் கைது

சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது தாக்குதல் மேற்கொண்ட மூன்று இராணுவத்தினர் முல்லைத்தீவு பொலிஸாரால் இன்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினரால் மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ☞2

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்து!

## இராணுவத்தினரின் அராஜகத்தைக் கண்டித்து முல்லைத்தீவு நகரில் இன்று பெரும் போராட்டம்






(சண்முகம் தவசீலன்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று சுயாதீன ஊடகவியலாளரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று முல்லைத்தீவு நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞2

## மட்டக்களப்பிலும் கண்டனப் போராட்டம்!





சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம்விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து மட்டக்களப்பில் இன்று கண்டனப் போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றி ☞2

## மாத்தளை மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு விஜயம்

(ந.லோகதயாளன்)

மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஸ் தலைமையில் சபையின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நாளை வருகை தருகின்றனர்.

யாழ்ப்பணம் மாநகர சபையின் செயற்பாடுகளை நேரில் அறிந்து கொள்ளும் வகையில் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை மாநகர சபையின் 20 உறுப்பினர்கள் இந்தப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

## கிண்ணியா படகு விபத்து உயிரிழப்பு 7 ஆக உயர்வு



திருகோணமலை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத் ☞2

## நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக யாழ். மாநகர சபையில் முக்கிய சந்திப்பு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கின்ற செயற்பாடுகளில் ஒன்றான 'நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைத்தலும் அங்கு நாவலர் பெருமானின் பணிகளை முன்னெடுத்தலும்' என்ற செயற்றிட்டத்துக்கு அமைவாக, நாவலர் ☞2



## காஸ் சிலிண்டர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது. சமையலறையில் சேதம் ஏற்பட்டது. எனினும் சமையலறையில் எவரும் இருக்காதமையால் உயிர் உடைமையளிப்பு ஏதும் நேரவில்லை.

தென்னிலங்கையில் தொடர்ச்சியாக காஸ் சிலிண்டர் வெடிப்பு நேர்ந்து வருகையில் அந்த வகையில் முதல் சம்பவம் இன்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

## செய்தியாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கும் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீடு அற்றவர்கள் சிலருக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகளை வட பிராந்திய கட்டளைத் தளபதி கையளித்த அதே சந்தர்ப்பத்தில் இந்தத் தாக்குதல் சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட பிராந்திய இராணுவத் தளபதியின் கவனத்தை நாம் கோருகின்றோம்.

மேலும், இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை வட பிராந்திய கட்டளைத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் உறுதிப்படுத்த முன்வர வேண்டும் என்று நாம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார். (இ)

## ஊடகவியலாளர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சித்திரவதைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யம், மட்டக்களப்பு ஊடக அமையம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

‘வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் நீதி கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம்’ எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள், பல்சமய ஒன்றியங்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

## விஸ்வச்சந்திரனைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் காயமடைந்த ஊடகவியலாளர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிண்ணியா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் 4 பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக 6 பேர் உயிரிழந்திருந்ததோடு 18 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 12 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தனர்.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முஹம்மது றபீஸ் பாத்திமா நிபா எனும் 6 வயது மாணவி சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த மாணவியின் உடல் திருகோணமலை தள வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவியின் தாயாரும் இந்த அனர்த்தத்தில் மீட்கப்பட்டு கிண்ணியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய இந்தப் படகு பாதை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.

## நாவலர் கலாசார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார மண்டபம் தொடர்பான சந்திப்பு யாழ். மாநகர சபையில் இன்று நடைபெற்றது.

இந்து சமய, கலாசார அலுவலல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பணிகளை யாழ். மாநகர சபையோடு இணைந்து செயற்படுத்தும் வகையில் சுமுகமான முறையிலே இடம்பெற்ற இந்தச் சந்திப்பு நிகழ்விலே, பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா, பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தயானந்தராஜா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர், விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு நிகழ்விலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனால் நாவலர் கலாசார மண்டபம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கத்துக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டன.

நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாகச் சுமுகமான முறையிலே இடம்பெற்ற கலந்துரையாடலில் , இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு சேர்ந்து நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக, சபையினரோடு கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.






# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாவீரர் தினச் சிறப்பு

**மாவீரர் தினம் நேற்று கடந்து சென்றுள்ளது. இந்த வருடம் அது ஏற்படுத்திய தாக்கமும் பரிமாணமும் வேறானவை.**

**சில நீதிமன்றங்கள் நிதி முறைமையைத் துணிச்சலாக நடைமுறைப்படுத்த – பரிபாலிக்க – முடிவெடுத்தமையால் மாவீரர் தினத்தின் சிறப்பு வேற்று வடிவத்தில் அமைந்தது.**

**மாவீரர் தினம் என்பது விடுதலைப் புலிகளின் வீர மறவர்களை ஏற்றி தொழுவது என்பதற்கும் அப்பால், தமிழர்கள் தங்கள் இதய தெய்வங்களை பூசிப்பதற்கான நிகழ்வுமாகும்.**

**அவர்களை விடுதலைப் புலிகளாக மட்டுமல்லாமல் அதையும் தாண்டி தங்கள் காவலர்களாக –எங்களுக் காகத் தங்களை ஈகம் செய்த அமரர்களாக – தமிழினம் போற்று கின்றது.**

**தமது இரத்தத்தின் இரத்தங்களான அந்த உறவுகளை நினைவேந்தவும் ஒருங்கு சேர்ந்து அஞ்சலிக்காகவும் தமிழ் மக்களுக்கு உள்ள உரிமையாக மாவீரர் தின அனுஷ்டானம் தமிழர்களினால் கணிக்கப்படுகின்றது.**

**பேரிழப்புகளாலும், போரழிவுகளாலும் துவண்டு போய்க் கிடக்கும் தமிழினத்தை ஆற்றுப்படுத்தும் ஒரு கூட்டு நினைவேந்தல் இது.**

**இப்படிக் கூட்டாக நினைவேந்தல் செய்வது அடிப்படை மனித உரிமைகளுள் பிரதானமானது.**

**தமிழர்களைப் பொறுத்தவரை கோட்டாவின் கொடூர அரசு – பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடம் – அதிகாரத்துக்கு வந்தமை முதல் இப்படித் தமது உறவுகளை அவர்கள் நினைவேந்தி அஞ்சலிப்பதை 'பயங்கரவாதச் செயலாக' திரித்து அர்த்தம் பண்ணி அதைத் தடுப்பதன் மூலம் தனது இரும்புக்கர அடக்குமுறையை தொடர்ந்தும் தமிழினம் மீது பிரயோகித்து வருகிறது.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலிருந்து, பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களும், நாடுகளும் இப்படி நினைவேந்துவதும் அஞ்சலிப்பதும் சர்வதேச நியமங் களின்படி மக்கள் கூட்டம் ஒன்றுக்குரிய பிரதான அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும், கோட்டாவின் கொடுங்கோல் அரசு அதனை செவிமடுக்க மறுத்து நின்றது.**

**எனினும், சர்வதேசத்தின் கருத்தையும் நீதியின் நியாயத்தையும் புரிந்து கொண்ட சில நீதிமன்றங்கள் துணிச்சலான முடிவை எடுத்து உத்தரவுகளைப் பிறப்பித்தன. மக்கள் தங்கள் உறவுகளுக்காக நினைவேந்து வதைத் தடுக்க முடியாது என்று அவை கைவிரித்தபோது கொடுங்கோல் அரசு தன் முப்படைகளையும் பொலிஸையும், களத்தில் இறக்கி எதேச்சதிகாரமாக அடக்குமுறையைப் பிரயோகித்தது.**

**நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்று மதிப்பளிக்கப்பட்ட தமது உரித்தை வழமை போல தனது சிங்களப் படையை ஏவி விட்டு அடக்குமுறை நடவடிக்கையாக அதைத் தடுக்க முயன்றது பேரினவாத சிங்களம்.**

**எனினும் பல இடங்களிலும் தமிழர்கள் – அரசியல்வாதிகளும் , அரசியல் செயற்பாட்டாளர்களும், மனித உரிமை வாதிகளும், பொதுமக்களும் – அஹிம்சை முறையில் போராடி தமது அந்த உரித்தை நடைமுறையில் பொருட்படுத்தி தமது மாவீரர்களுக்கு வீர அஞ்சலியை செலுத்தியிருக்கின்றார்கள்.**

**இனிவரும் காலங்களில் மாவீரர் தின நினைவேந்தல்கள் உணர்வெழுச்சியுடன் நடைபெறுவதற்கான அத்திபாரம் இந்தத் தடவை ஆயுதப்படை அடக்குமுறையை மீறியும் நடந்தமை மூலம் போடப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் இம்முறை கடந்து சென்ற மாவீரர் தினம் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும்.**

# லுனுவிலகே லசந்தவின் மரணம் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு முன்பே தெரியுமாம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

பொலிஸ் காவலில் உயிரிழந்த லுனுவிலகே லசந்தவின் மரணம் சட்டவிரோதமான படுகொலை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபருக்குத் தெரிந்திருந்த நிலையிலேயே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

ஏறக்குறைய ஒன்றரை தசாப்தங்களாக இலங்கை பொலிஸாருக்கு வழங்கிய பயிற்சியை, இனி வழங்கப்போவதில்லை என ஸ்கொட்லாந்து பொலிஸ் அறிவித்து இரண்டு நாள்களுக்குள், லுனுவிலகே லசந்த அல்லது டிங்கரிங் லசந்த வெள்ளிக்கிழமை காலை பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை முயற்சி தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருந்த நிலையிலும் இந்த கொலை இடம் பெற்றுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உடனடியாக இது தொடர்பாகப் பொலிஸ் மா அதிபருக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் அறிவித்தார்.

மேலும், இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் ஆணையாளர், ஆணைக்குழுவின் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளார். ஏனென்றால் அவர் மனிதாபிமான அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவராக செயற்படுகின்றார்.

வெள்ளிக்கிழமை களுத்துறை, தியகம பகுதியில், சந்தேகநபருக்குச் சொந்தமான கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டு ஒன்றைத் தேடிச் சென்றபோது சந்தேகநபர் குறித்த கைத்துப்பாக்கியால் பொலிஸ் அதிகாரிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ள நிலையில், பொலிஸாரின் பதில் தாக்குதலில் குறித்த சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸ் காவலில் உள்ள சந்தேகநபர் ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ராஜீவ் அமரசூரியவின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள அறிக்கையில் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் நிலைமை காரணமாக இலங்கை பொலிஸாருக்கு பயிற்சியைத் தொடர வேண்டாம் எனத் தீர்மானித்துள்ளதாக, ஸ்காட்லாந்தின் பொலிஸ் தலைவர் இயன் லிவிங்ஸ்டன் நவம்பர் 24ஆம் திகதி உயர் பொலிஸ் அதிகாரிகளின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள கைதுகள், தடுப்புக்காவல் மரணங்கள், சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையான தடுப்புக்காவல்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இலங்கை பொலிஸாருக்கு ஸ்கொட்லாந்து பொலிஸாரால் வழங்கப்படும் பயிற்சியை இடைநிறுத்த தீர்மானிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முதல் மாவீரர் சங்கர் சத்தியநாதன் இல்லத்தில் நினைவேந்தல் அனுஷ்டிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் லெப்ரினன் சங்கருக்கு, ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

மாவீரர் லெப்ரினன் சங்கருடைய இல்லத்தில் கப்டன் பண்டிதர் அவர்களுடைய தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உப தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமான க.சதீஸ் ஆகியோர் ஈகை சுடரேற்றி, அவருக்கு அக வணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

# மாவீரர் நினைவேந்தல் படத்தை முகநூலில் பதிவிட்டவர் கைது

மாவீரர் நினைவேந்தல் தொடர்பான புகைப்படம் ஒன்றை முகநூலில் பதிவிட்ட இளைஞர் ஒருவர், விசேட அதிரடிப்படையினரால் மன்னாரில் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

இறந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக முகநூலில் படம் ஒன்றை பதிவிட்டார் எனத் தெரிவித்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# புதிய வைரஸுக்கு பெயர் சூட்டப்பட்டது


தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கொவிட் வைரஸ் பிறழ்விற்கு, உலக சுகாதார ஸ்தாபனம் 'ஒமிக்ரோன்' (OMICRON) எனப் பெயர் சூட்டியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய பிறழ்வானது, தடுப்பூசிகளுக்கும் கட்டுப்படாதது என கண்டறியப்பட்டுள்ளது. பி.1.1.529 என்ற இந்த வைரஸ் பிறழ்வு தொடர்பான தகவல், முதல் தடவையாக கடந்த 24ஆம் திகதியே உலக சுகாதார ஸ்தாபனத்தினால் உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் ஊடாகவே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.டெல்டா பிறழ்வை போன்றே, இதுவும் ஆபத்தானது என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தென் ஆபிரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் இந்த வைரஸ் தற்போது பரவி உள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிரித்தானியாவில் இருவருக்கு ஒமிக்ரோன் தொற்று கண்டுபிடிப்பு!




பிரித்தானியாவில் இருவருக்கு புதிய கொவிட் மாறுபாடான ஒமிக்ரோன் (new variant Omicron) தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார செயலாளர் தெரிவித்துள்ளார். ப்ரெண்ட்வுட், எசெக்ஸ் மற்றும் நொட்டிங்ஹாமில் (Brent wood, Essex, and Notting ham) புதிய பிறழ்வுகளை பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு நிறுவனம் கண்டறிந்துள்ளதாக சஜித் ஜாவிட் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிறழ்வுகள் தென்னாபிரிக்காவிற்கு பயணம் செய்ததோடு தொடர்புடையவை என்றும், மேலும் சோதனைகள் மற்றும் தொடர்புத் தடமறிதல் நடைமுறைகள் தொடர்வதால் அவர்களும் அவர்களது குடும்பத் தினரும் சுயமாக தனிமைப்படுத்தப் பட்டு இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித் துள்ளார். இந்தப் புதிய மாறுபாடு அடையாளம், தென்னாபிரிக்கா, போட்ஸ்வானா, பெல்ஜியம், ஹொங்கொங் மற்றும் இஸ்ரேலிலும் ஏற்கனவே கண்டறியப் பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரதம மந்திரி பொரிஸ் ஜோன்சன் டவுனிங் வீதி வாசஸ்தலத்தில், அரசாங்கத்தின் தலைமை அறிவியல் ஆலோசகர் சர் பேட்ரிக் வாலன்ஸ் மற்றும் இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிறிஸ் விட்டி (chief scientific advisor to the government, Sir Patrick Vallance, and the UK's chief medical officer Prof Chris Whitty) ஆகியோருடன் செய்தியாளர் சந்திப்பை நடத்தவுள்ளார். தென்னாபிரிக்காவில் புதிய ஒமிக்ரோன் மாறுபாடு ஏற்பட்டமை குறித்து உலக சுகாதார நிறுவனத்திற்கு கடந்த புதன்கிழமை அறிவிக் கப்பட்டது. இந்த நிலையில் உலகெங் கிலும் உள்ள நாடுகள் தற்போது ஒமிக்ரோனின் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தென்னாபிரிக்க நாடுகளுடனான பயணத்தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப் படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

பத்து நாடுகள் தப்போது பிரித்தானியாவின் சிவப்பு பயண பட்டியலில் உள்ளன, இந்த நாடுகளில் இருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு பின் வரும் அனைவரும் 10 நாள்களுக்கு ஒரு விடுதியில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்கா, நமீபியா, சிம்பாப்வே, பொட்ஸ்வானா, லெசோதோ மற்றும் எஸ்வதினி ஆகிய நாடுகளை பிரித்தானியா சிவப்புப் பட்டியலில் சேர்த்தது.

நேற்று சனிக்கிழமையன்று தனது அறிவிப்பில், அங்கோலா, மொசாம்பிக், மலாவி மற்றும் சாம்பியா ஆகிய நாடுகளும் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹைப்பர்சோனிக் ஏவுகணையை தயாரிக்கும் ரஷ்யா

ஸிர்கான் ஹைப்பர்சோனிக் வகை ஏவுகணையைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாக ரஷ்யா அறிவித் துள்ளது.

இந்த ஏவுகணை மேற்கத்திய நாடுகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் 6 ஆயிரத்து 670 மைல் தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்டதாக இருக்கும் என ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது.

தலைநகர் மாஸ்கோவிற்கு அருகிலுள்ள ரியூடோவோ என்ற இடத்தில் இரகசிய ஆலையில் குறித்த ஏவுகணையை தயாரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் ஸிர்கான் ஹைப்பர்சோனிக் வகை ஏவுகணையை எதிர்வரும் ஆண்டில் தயாராக வைத்திருக்க ஜனாதிபதி புடின் உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா, கடந்த ஒரு மாதத்திற்கு முன் இந்த ஏவுகணையை சோதனை செய்தமை குறிப்பிடத்தக்கது.





# பிரித்தானியாவின் யோசனை பிரான்ஸால் நிராகரிக்கப்பட்டது

பிரான்ஸிலிருந்து தங்கள் நாட்டுக்கு அகதிகள் ஆபத்தான கடல் பயணம் மேற்கொள்வதைத் தடுப்பதற்காக பிரித்தானியா முன்வைத்த யோசனைகளை பிரான்ஸ் நிராகரித்தது.

பிரித்தானியாவை அடைய முயன்ற புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு, ஆங்கிலக் கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27பேர் உயிரிழந்தமையையடுத்து இது போன்ற விபத்து நிகழாமல் இருக்க, தாம் எடுக்க விரும்பும் ஐந்து படிகளை கோடிட்டுக் காட்டி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் கடிதமொன்றை அனுப்பி வைத்தார்.

இதில், பிரான்ஸ் கடற்கரையிலிருந்து அதிகமான படகுகள் வெளியேறுவதைத் தடுக்க கூட்டு ரோந்து, சென்சார்கள் மற்றும் ரேடார் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், பரஸ்பர கடல் ரோந்துகள் ஒருவருக்கொருவர் பிராந்திய நீரில் மற்றும் வான்வழி கண்காணிப்பு, பிரான்ஸ் உடனான இருதரப்பு வருவாய் ஒப்பந்தத்தில் உடனடி வேலை, உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆனால், பிரித்தானியா வரும் அனைத்து அகதிகளையும் பிரான்ஸ் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். அகதிகள் வருவதைத் தடுப்பதற்காக பிரான்ஸ் கடற்கரைப் பகுதிகளில் பிரித்தானியா படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று பொரிஸ் ஜோன்ஸன் வலியுறுத்தியிருந்தார்.



எனினும், அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று பிரான்ஸ் அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் கேப்ரியல் அட்டல் தெரிவித்தார்.

எனவே, இந்தப் பிரச்சினை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் கூட்டத்துக்கு பிரித்தானிய உள்துறை அமைச்சர் பிரீத்தி படேலுக்கு அழைப்பு விடுக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை 25,700 பேர் இத்தகைய ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர். கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகமாகும்

# கனடா நாட்டில் படுகொலை வீதம் உயர்வு

கனடாவில் ஒன்றரை தசாப்தத்திற்கும் மேலாக, அதாவது 2005ஆம் ஆண்டுக்குப் பிறகு காணப்படாத அளவிற்கு படுகொலை வீதம் உயர்வடைந்துள்ளதாக ஸ்டேட் கேனின் புதிய தரவுகள் காட்டுகின்றன. 2020ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பொலிஸாரின் அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் குறைந்துவிட்டன என ஸ்டேட் கேன் குறிப்பிட்டது.

ஆனால் கொவிட் 19 தொற்றுநோயுடன் இணைக்கப்பட்ட முடக்கநிலைகளால் ஏற்படும் சமூக அழுத்தங்கள் சில வகைகளில் உயர்வுக்கு வழிவகுத்தன. கனேடிய பொலிஸ் படைகள் 2020இல் மொத்தம் 743 கொலைகளைப் பதிவு செய்துள்ளன. இது 2019இல் 687ஆக இருந்தது. கொலை வீதம் 100,000 பேருக்கு 1.95ஆக அதிகரித்துள்ளது. 15 ஆண்டுகளில் அதிகபட்சமாக, 2019இல் 100,000 பேருக்கு 1.83ஆக இருந்தது.

100,000 மக்கள்தொகைக்கு 2.69 கொலைகள் என்று 1991இல் இருந்தது. இது கனடாவில் 1991ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட மிக அதிகமான கொலைகள் ஆகும்.





# தமிழகம் திரும்பிய இந்திய மீனவர்கள் படகுகளையும் விடுவிக்கக் கோரிக்கை

இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 23 பேரில் 18 பேர் தாயகம் திரும்பினர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 23 நாகை மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து, சிறையில் அடைத்தனர். பின்னர் அவர்களை இலங்கை அரசு விடுவித்ததையடுத்து, 18 பேர் விமானம் மூலம் சென்னை திரும்பினர்.

5 பேருக்குக் காய்ச்சல் அறிகுறி இருந்ததால் அவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 2 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. 3 பேர் மருத்துவக் கண்காணிப்புக்குப் பிறகு தமிழகம் செல்லவுள்ளனர்.

இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வேண்டும் என தமிழகம் திரும்பிய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஒமிக்ரோன் வைரஸால் மூன்றாவது அலை இந்திய மருத்துவ நிபுணர் எச்சரிக்கை



புதிய வகை 'ஒமிக்ரோன்' வைரஸ், இந்தியாவில், மூன்றாவது அலையைத் தூண்டலாம் என்று மருத்துவ நிபுணரான நரேஷ் புரோகித் எச்சரித்துள்ளார்.


கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தியாவில் கடும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் தருணத்தில் தென்னாபிரிக்காவில்தோன்றியுள்ள புதிய வகை வைரஸான ஒமிக்ரோன் வைரஸ், உலகமெங்கும் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த புதிய வகை வைரஸால்மூன்றாவது அலை இனி வரும்நாள்களில்இந்தியாவில் உருவாகலாம் என்று இந்திய தேசிய தடுப்பூசித் திட்டத்தின் ஆலோசகரும், மருத்துவ நிபுணருமான டாக்டர் நரேஷ் புரோகித் எச்சரித்திருக்கிறார்.

இது குறித்து அவர் விரிவான தகவலை வெளியிட்டிருக்கிறார். அதில், கொரோனா வைரஸ் என்பது ஒற்றை இழை கொண்ட ஆர்.என்.ஏ. வைரஸாகும். மரபணு வரிசையில் ஏற்படுகிற மாற்றங்கள் அதில்பிறழ்வுகளைஏற்படுத்தி புதிய வைரஸாக உருவெடுக்க வைக்கின்றன. இது வைரஸின் பரிணாம வளர்ச்சியில் இயல்பான ஒன்றுதான். ஒரு வைரஸ் எளிதில் பாதிக்கக் கூடிய உடலில் நுழைகிற போது, அது நகல் எடுக்கத் தொடங்குகிறது. நோய்த்தொற்றின் பரவலுடன் நகலெடுப்பதும் அதிகரிக்கிறது.

புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஒமிக்ரோன் எனபெயரிடப்பட்டுள்ள பி.1.1.529 வைரஸ், இந்தியாவில் மூன்றாவது அலையை ஏற்படுத்தலாம். தென்னாபிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்டுள்ள இந்த வைரஸ், தற்போதுள்ள உருமாறிய வைரஸ்களை விட ஸ்பைக் புரதத்தில் கூடுதல் பிறழ்வுகளை கொண்டுள்ளது என்பதால் தடுப்பூசியின் செயல்பாடுகள் குறித்து கேள்விகளை எழுப்புகின்றன. தற்போது வரையில் அல்பா, பீட்டா, காமா, டெல்டா என 4 வைரஸ்கள் கவலைக்குரிய வைரஸ்களாக விஞ்ஞானிகளால் அடையாளம் காணப்பட்டுள்ளன. தடுப்பூசித் திட்டம் முன்னேற்றம் கண்டு வருகிற நிலையில், மூன்றாவது அலையில் இருந்து நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றிருக்கிறோம் என நினைத்தவர்களுக்கும், நோய்த் தொற்று ஏற்பட்டபோது அறிகுறி இல்லாமல் இருந்தவர்களுக்கும் இந்த வைரஸ் பிரச்சினையை ஏற்படுத்தலாம்.

தற்போது இரண்டாவது அலையின் பாதிப்பு குறைந்துள்ள நிலையில், புதிய வகை வைரஸால்மூன்றாவது அலை உருவாகலாம். தொற்று பாதிப்பு அதிகரிக்கலாம். சில மாநிலங்களில் நிலைமை மோசமாகலாம். டெல்டா வைரஸ் அதிகமாக பரவுகிற தன்மையை கொண்டது. புதிய வைரஸைக் பொறுத்தமட்டில் அதன் பரவும் தன்மை, தடுப்பூசிச் செயல்திறன் குறித்து எந்த முடிவான ஆதாரமும் இல்லை. அதேநேரத்தில்பொது மக்கள் மிகவும் எச்சரிக்கையுடனும் கொரோனா கால விதிமுறைகளை பின்பற்றியும் நடந்துகொள்ளவேண்டும் என்று அவர் எச்சரித்துள்ளார்.



# ஜெருசலேம் புனித பயணத்துக்கான நிதியுதவி அறுபது ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டது

ஜெருசலேம் புனித பயணத்துக்கு அருட்சகோதரிகள் மற்றும் கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை 60 ஆயிரம் ரூபாவாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆர்.கார்த்திக் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கையில், ஜெருசலேம் புனித பயணத்துக்கு அருட்சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37 ஆயிரம் ரூபாவிலிருந்து 60 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும், என அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அந்த மானியத் தொகையை உயர்த்தி வழங்குமாறும், அதனை செயல்படுத்தும் வகையில் தேவையான கூடுதல் நிதி 11.5 லட்சம் ரூபாவை 2021-22 ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் உரிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்குமாறும் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது.

இந்த கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு ஜெருசலேம் சென்றுவர நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் அருட்சகோதரிகள் மற்றும் கன்னியாஸ்திரிகளுக்கு மட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை 37 ஆயிரம் ரூபாவிலிருந்து இருந்து 60 ஆயிரம் ரூபாவாக உயர்த்தி வழங்க நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# போக்சோ சட்டத்தின் செயல்பாடுகள்; கூட்டத்தில் முதலமைச்சர் ஆய்வு

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்சோ சட்டத்தின் செயல்பாடுகள் குறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வுக்கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்சோ சட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், போக்சோ சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும் அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

தமிழ் நாட்டில் தேங்கியுள்ள போக்சோ வழக்குகளை விரைந்து முடித்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு இந்தக் கூட்டத்தின்போது அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# குளிர்காலக் கூட்டத்தொடரின் முதல் நாளன்றே வேளாண் சட்டங்களை இரத்துச் செய்யத் திட்டம்



இந்திய நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரின் முதல் நாளன்றே மூன்று வேளாண் சட்டங்களையும் ரத்துச் செய்யும் மசோதாவை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

டெல்லியில் ஒருவருட காலமாக பஞ்சாப் விவசாயிகள் நடத்திய போராட்டத்தின்பலனாகசர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுகிறேன் என பிரதமர் மோடி அறிவித்தார். எனினும் நாடாளுமன்றத்தில் மசோதா இயற்றி இந்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என போராட்டக்களத்தில் உள்ள விவசாயிகளும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சியினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் முதல் நாளன்றே முற்றுப்புள்ளி வைக்க இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்திய நாடாளுமன்றின் குளிர்காலக் கூட்டத்தொடர் நாளை திங்கட்கிழமை தொடங்கவுள்ளது. ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தை ரத்துச் செய்யவேண்டும் என்றால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா தாக்கல் செய்யப்பட்டு, ஒப்புதல் பெறவேண்டும். பின்னர் அந்தத் தீர்மானம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் ஒப்புதல் வழங்கியவுடன் அந்த குறிப்பிட்ட சட்டம் முறைப்படி ரத்துச்செய்யப்படும். சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்களையும் ஒரே மசோதா மூலம் ரத்துச் செய்ய இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த மசோதாவை கூட்டத்தொடரின் முதல் நாளன்றே மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர தோமர் தாக்கல் செய்வார் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக டெல்லியில் நாளை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த விவசாய வாகனப் பேரணியை விவசாய அமைப்பினர் ரத்துச் செய்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீதிகள் சீரின்மையால் மக்கள் அவலத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்டமைலம்பாவெளி,விவேகானந்தபுரம் பகுதியில் பிரதான வீதி உள்ளிட்ட எந்தவீதியும் இதுவரையில் புனரமைக்கப்படாத காரணத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.

மைலம்பாவெளி, விவேகானந்தபுரம் பகுதியில் 1995ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட இவர்களுக்கு இதுவரையில் முறையான வீதிகள் அமைத்துக் கொடுக் கப்படாமல் உள்ளன எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் சுமார் 800க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றபோதிலும் இதுவரையில் ஒரு வீதிகூட சீராக அமைக்கப்படவில்லையெனவும், விவேகானந்தபுரம் பிரதான வீதி உட்பட எட்டுக்கும் மேற்பட்ட குறுக்கு வீதிகள் உள்ள நிலையில், மழைக்காலத்தில் குறித்த வீதிகளில் பயணக்கும்போது மிகவும் சிரமமான நிலையினை எதிர்கொள்கிறோம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.





## வாக்குவாதம் நீண்டதில் ஒருவர் மீது கத்திக்குத்து!

இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கணேவத்த தம்பகல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கல்கமுவ, இஹல பழுகுமுதேவ பகுதியைச் சேர்ந்த பிரியங்கர சாலிய குமார (வயது-46) என அடையாளம் காணப்பட்டுள்ளார். கார் திருத்துநராள மரணமானவர் கணேவத்தை தம்பகல்ல பிரதேசத்தில் உள்ள தனது உதவியாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அந்த நபர் உதவியாளரால் குத்திக் கொல்லப்பட்டார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மட்டக்களப்பில் போக்குவரத்து பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கன மழை காரணமாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மேலும் மண்டூர் – வெல்லாவெளி பிரதான பாதையூடாக வெள்ள நீர் பாய்வதன் காரணமாக அதன் ஊடான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதியூடாக பாடசாலைகள், அலுவலகங்களுக்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேபோன்று காக்காச்சி வெட்டை ஆனைகட்டியவெளி பிரதான வீதியிலும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் நிலவுகின்றது. மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளன.

## கிரான்குளம் பிரதான வீதியில் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான்குளத்தின் பிரதான வீதியில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிரான்குளம் விளையாட்டு மைதானத்தினை மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளும் நடவடிக்கையினை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக்கழக இளைஞர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்ட பகுதியை தனது காணியெனக் கூறி மண்முனைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் அபகரிக்கமுனைவதாகவும் இதன்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

## கிண்ணியா வில்வெளி பகுதியில் விபத்து



திருகோணமலை கிண்ணியா வில்வெளி பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

விபத்து தொடர்பில் தெரிய வருவதாவது,

கிண்ணியாவில் இருந்து சுரங்கல் நோக்கி பயணித்த ஓட்டோ நாய் ஒன்றுடன் மோதியதில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ எதிர்த்திசையில் வந்த மோட்டார்சைக்கிளில் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே பலத்த காயங்களுடன் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேல திக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு விபத்துக்குள்ளான நபர் கிண்ணியா இடிமண் பிரதேசத்தைச் சேந்த ஏ.எப். பாரூக் (53வயது) எனவும் விபத்துக்குள்ளான நபரின் கால் ஒன்று முறிந்த நிலையில் திருகோணமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் விபத்து தொடர்பில் ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பாடசாலை 19 வயதுக்குட்பட்ட டிவின் 3 தொடர் இறுதிப்போட்டிக்கு யாழ்.மத்திய கல்லூரி தெரிவு

இலங்கை பாடசாலை 19 வயதுக்குட்பட்டோர் அணிகளுக்கு இடையிலான டிவின் 3 கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் ஹங்வெல்ல இராஜசிங்க மத்திய கல்லூரி அணிக்கு எதிராக 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி, தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எந்தேரமுல்ல சென். ஜோசப் கல்லூரிக்கு எதிராக 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றியைப் பெற்றது.

இராஜசிங்க மத்திய கல்லூரி அணி, காலிறுதியில் மதுகமை புனித மரியாள் கல்லூரி அணிக்கு எதிராக 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தது.

இந்தநிலையில், நேற்று கொழும்பு நாலந்த கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இராஜசிங்க அணி வீரர்கள் யாழ். மத்திய கல்லூரி வீரர்களின் பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் முதல் ஆறு விக்கெட்டுக்களையும் 27 ஓட்டங்களுக்கு இழந்தனர்.

எனினும், ஏழாவது விக்கெட்டுக்கு இசுரு உதேஷ் மற்றும் பிரவீன் மனீ ஆகியோர் இணைந்து பெற்ற 48 ஓட்ட இணைப்பாட்ட உதவியுடன் இராஜசிங்க மத்திய கல்லூரி அணி, 47.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. இசுரு உதேஷ் 35 ஓட்டங்களையும் பிரவீன் மனீ 28 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் நியூடன் 3 விக்கெட்டுக்களையும், இந்துஜன் மற்றும் கௌதம் ஆகியோர் தலா 2 விகெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 105 என்ற வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணி 20.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சாரங்கன் 50 ஓட்டங்களை எடுத்தார். ஆரம்ப விக்கெட்டுக்காக சாரங்கன் மற்றும் விதுஷன் ஜோடி 70 ஓட்டங்களைப் பெற்றனர். வீழ்த்தப்பட்ட 3 விக்கெட்டுக்களையும் இராஜசிங்க மத்திய கல்லூரியின் பிரவீன் மனீ கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

## புதிய கொவிட்-19 திரிவினால் கிரிக்கெட் இலங்கை மகளிர் அணி உலகக் கிண்ண வாய்ப்பினை இழந்தது




சிம்பாப்வேயில் நடைபெற்றுவந்த மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் தொடர் கொவிட்-19 வைரஸின் புதிய திரிவு ஏற்படுத்திய அச்சம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 2022 ஆம் ஆண்டுக்கான மகளிர் உலகக் கிண்ணத்தொடரில் விளையாடும் வாய்ப்பினை துரதிஷ்டவசமாக இழந்திருக்கின்றது.

நியூசிலாந்தில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தொடரின் எஞ்சிய மூன்று அணிகளையும் தெரிவு செய்கின்ற நோக்கில், எட்டு நாடுகள் பங்குபெறும் மகளிர் உலகக் கிண்ணத்தின் தகுதிகாண் தொடரானது சிம்பாப்வேயில் ஒழுங்கு செய்யப்பட்டு தொடரின் போட்டிகள் சிலவும் நடைபெற்றிருந்தன.

இவ்வாறான நிலையில் சிம்பாப்வே அமைந்திருக்கும் இடமான தெற்கு ஆபிரிக்காவில் கொவிட்-19 வைரஸின் புதிய திரிவு வேகமாக பரவி வருவதனையடுத்து, இந்தத் தொடர் சர்வதேச கிரிக்கெட் சபையினால் (ஐ.சி.சி.) உடனடியாக ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஒருநாள் போட்டிகளுக்கான மகளிர் கிரிக்கெட் அணி தரவரிசையின் அடிப்படையில், இந்தத் தொடரில் பங்குபற்றிய அணிகளான பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவை 2022ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத்தொடருக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதில் பங்களாதேஷ் அணி, ஒருநாள் தரவரிசையில் 5 ஆம் இடத்திலும், பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவை முறையே 7ஆம், 8 ஆம் இடங்களிலும் காணப்படுகின்றன.

இந்தத் தொடரில் குழு ஏயில் போட்டியிட்ட அயர்லாந்து மற்றும் இலங்கை அணிகள் 2022ஆம் ஆண்டுக்கான மகளிர் உலகக் கிண்ணத்தொடரில் விளையாடும் வாய்ப்பினை இழந்திருக்கின்றன. இந்த அணிகள் தரவரிசையில் முறையே 9ஆம், 10ஆம் இடங்களில் உள்ளன.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி, இந்தத் தகுதிகாண் தொடரில் தமது முதல் போட்டியில் நெதர்லாந்திற்கு எதிராக இலகுவாக வெற்றியொன்றினைப் பதிவு செய்திருந்தது. தனது அடுத்த போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுடன் இலங்கையணி விளையாடவிருந்த நிலையில் இலங்கை மகளிர் அணியில் வீராங்கனைகள் சிலருக்கு கொவிட்-19 வைரஸ் தொற்று ஏற்பட்ட காரணத்தினால் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.




## பெண்கள் பிக் பாஷ் லீக் தொடர் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி சம்பியன்

ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கான பிக் பாஷ் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி சம்பியனாகியுள்ளது.

நேற்று பெர்த் நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ், அடிலைட் ஸ்டிரைகர்ஸ் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன. நாணயச் சுழற்சியில் வென்ற அடிலைட் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து, 147 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலைட் அணி களம் இறங்கியது. அந்த அணியால் 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 134 ஓட்டங்களையே எடுக்கமுடிய, 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி, முதல் முறையாக சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

## தென்னாபிரிக்கா- நெதர்லாந்து போட்டிகள் ஒத்திவைப்பு

புதுவகை கொரோனா வைரஸ் பரவலால், தென்னாபிரிக்கா-நெதர்லாந்து அணிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நெதர்லாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. இரு அணிகளுக்குமிடையேயான முதல் போட்டி கனமழை காரணமாக பாதியில் கைவிடப்பட்டது. அடுத்த இரண்டு போட்டிகளும் இன்றும் டிசெம்பர் முதலாம் திகதியிலும் நடைபெறவிருந்தன.

இந்த நிலையில், தென்னாபிரிக்காவில் ஒமிக்ரோன் எனும் புதிய வகை கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் ஆலோசனை மேற்கொண்டு போட்டிகளை ஒத்திவைக்க முடிவுசெய்துள்ளன.

இதுகுறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் செயல் தலைமை நிர்வாக அதிகாரி போலெட்சி மொசெகி கூறும்போது, தற்போது நிலவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையால் நாங்கள் ஏமாற்றமடைகிறோம். நிலைமை சீரானபிறகு போட்டிகளை நடத்த முடிவெடுத்துள்ளோம், என்று தெரிவித்துள்ளார்

# ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அனைத்தும் குப்பைக் கூடத்தில்!

## தேரர் வெளியிட்ட தகவல்



அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக ஜனாதிபதி,பிரதமர், அமைச்சர்மற்றும்அரசியல்வாதிகள்பொய்யான தகவல்களையே வழங்கிக்கொண்டு வருகின்றனர் என அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலைய ஏற்பாட்டாளர்தென்னனே ஜானரத்னதேரர்தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒரு தீர்மானத்தை அமைச்சரவை கூடத்தில் தீர்மானிக்க வேண்டும். இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது ஜனாதிபதியின் தலைமையில் அடங்கியுள்ளது. பல மேடைகளில் பட்டதாரிகள் தொடர்பாகப் பல வேலை திட்டங்களை அவர் முன்வைத்திருந்தார்.

முன்வைத்த வேலைத்திட்டங்கள் அனைத்துமே இடையில் நிறுத்தப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வீதியில் நிற்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

5 பயிற்சிகளைச் செய்து அவர்களுக்கான நியமனங்களைவழங்குவதாகக்கூறி இருந்தார். அதையும் தற்போது இடைநிறுத்தியுள்ளார். ஆகவே, நாங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எங்களது நிரந்தர நியமனம் தொடர்பாக தீர்க்கமான முடிவு ஒன்றை வழங்க வேண்டும்.வழங்காத பட்சத்தில் நாங்கள் வீதியில் இறங்கிப் போராட நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோதுமை மாவின் விலையும் எகிறியது

கோதுமை மாவின் விலை நேற்று (சனிக்கிழமை) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 17 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சந்தை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெதுப்பக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவரின் முகத்தை கடித்த 17 வயது மாணவி!

17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் க.பொ.த. (சாதாரண தர) நடைமுறைப் பரீட்சை பயிற்சிக்காக பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய போது நபர் ஒருவர் குறித்த மாணவியை துஷ்பிரயோகம் செய்யமுற்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக சிங்கள இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த மாணவி தனது கிராமத்துக்குச் செல்லும் வழித் தடத்தில் வந்த ஒருவர், சாலையைக் கடந்து, மாணவியைத் தாக்கி, அருகிலுள்ள வெறிச்சோடிய ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு அழைத்துச் சென்றார். பின்னர், தன்னை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற போது, குறித்த நபரின் முகத்தை கடித்து, கல்லால் முகத்தில் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் அந்த மாணவி.

பின்னர் இது தொடர்பில் எல்ல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, இப்பகுதி ஆள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி காணப்படுவதால், கடந்த காலங்களில் இது போன்ற அசம்பாவிதம் நடந்ததாக கிராமமக்கள் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் 216 குடும்பங்களைச் சேர்ந்த 758 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால–நிலை காரணமாக 216 குடும்பங்களைச் சேர்ந்த 758பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

இதன்போது சூரியராஜ் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

'வியாழக்கிழமை முதல் பெய்த மழை மற்றும் அதிக காற்று காரணமாக 216 குடும்பங்களைச் சேர்ந்த 758பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், காரைநகரில் இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் தற்காலிகமாக வியாவில் பயிற்சி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்' என அவர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை காரைநகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமை பிரிவினர் நேரடி கள விஜயத்தை மேற்கொண்டு, சேத விவரங்கள் தொடர்பில் கள ஆய்வில் ஈடுபட்டனர்.

# நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக காரைநகரில் 265 குடும்பங்கள் பாதிப்பு

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 265 குடும்பங்களைச் சேர்ந்த 916 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனரென மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கால–நிலையின் நிலைவரம் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

அண்மையில் பெய்த மழை மற்றும் அதிக காற்று காரணமாக 265 குடும்பங்களைச் சேர்ந்த 916 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏழு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 8 பேர் தற்காலிகமாக முகாமில் தங்கியுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

# நாவலர் குருபூசை தினம் கிளிநொச்சியில் நடந்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.27

சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றிய ஆறுமுக நாவலரின் குருபூசைத்தினம் நேற்றாகும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குருபூசைத்தினம் நாடுபூராகவும் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாந்தபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் குருபூசைத்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நாவலரின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஆறுமுக நாவலரை வழிபட்டனர். சாந்தபுரம் முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆறுமுகநாவலர் பற்றிய பேச்சு, பண்ணிசை, தேவாரம் என்பன இடம்பெற்றன. குறித்த குருபூசைத்தின நிகழ்வில், மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆலய நிர்வாகத்தினர், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பெண்களை இழிவாகப் பேசுகின்ற எம்.பியை இடைநிறுத்த வேண்டும்

## மக்கள் சக்தி அமைப்பு வலியுறுத்து



நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர் பெண்களை அவதூறாக அல்லது இழிவாகப் பேசுவாராயின் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து 3 மாதங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் இருந்து இடைநிறுத்த வேண்டும் என மக்கள் சக்தி அமைப்பின் செயலாளர் பிரியந்த விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

உலகளவில் தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் வாய்மூல அவதூறுகள் பரப்பப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நாட்டின் உயர்பீடமான நாடாளுமன்றத்திலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது பெரும் பாதிப்புக்கு வழிவகுக்கும்.

உலகளாவிய ரீதியாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக துன்புறுத்தல்களும், வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதற்கு எதிராக 1991 ஆம் ஆண்டு வுமன்ஸ் க்ளோபல் லீடர்ஷிப் இன்ஸ்டியூட் எனப்படும் செயற்பாட்டாளர்களால் அமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்பின்னர் நவம்பர் 25ஆம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சர்வதேச தினமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16 நாள்களுக்கு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்படும்.

'பாலின ரீதியான வன்முறைகளைத் தடுப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரால் யுனிடெக் என்ற அமைப்பின் ஊடாக 2030 ஆம் ஆண்டுக்குள்வன்முறைகள், துன்புறுத்தல்கள், சித்திரவதைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2021இல் வெளியிடப்பெற்றது.